# நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளையின் 2021-2022 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள் 2017-ன்படி நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.எண்.831/கனிமம்/2017, நாள் 11.09.2017-ன்படி நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது 23.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் 27/2017, நாள் 28.09.2017-ன்படி 1-இணை சார் பதிவாளர், நாமக்கல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | நிர்வாக குழு அமைப்பு | | மேலாண்மை குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், நாமக்கல் | 1. | மாவட்ட ஆட்சியர், நாமக்கல் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், நாமக்கல் | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், நாமக்கல் |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, நாமக்கல். | 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, நாமக்கல். |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல். | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல். |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், நாமக்கல். | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சி (PAPD), நாமக்கல் |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், நாமக்கல். | 6. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், நாமக்கல். |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல். | 7. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், நாமக்கல். |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், நாமக்கல். | 8. | மாவட்ட வன அலுவலர், நாமக்கல். |
| 9. | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), நாமக்கல். | 9. | முதன்மைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருச்சி மண்டலம். |
| 10. | கேர் அறக்கட்டளை, 31, முதல் தெரு, தில்லைபுரம், நாமக்கல். | 10. | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, நாமக்கல். |
| | | 11. | மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல். |
| | | 12. | மாவட்ட சமூக நல அலுவலர், நாமக்கல். |
| | | 13. | துணை இயக்குநர், (பொது சுகாதார மையப் பொறுப்பாளர்), சுகாதாரப் பணிகள், நாமக்கல். |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | 14. | வருவாய் கோட்டாட்சியர், திருச்செங்கோடு. |
| | | 15. | வருவாய் கோட்டாட்சியர், நாமக்கல். |

1) நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நாமக்கல் வங்கியில் கணக்கு எண். 37215312639 துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

2) நாமக்கல் மாவட்டத்தில் 42 பெருங்கனிம சுரங்க குத்தகை உரிமங்களும், 31 Minor Mineral (குவார்ட்ஸ் & பெல்ஸ்பர்) 13 குத்தகை உரிமங்களும், 83 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. 12.01.2015-க்கு முன்னர் சுரங்க / குவாரி குத்தகை உரிமம் பெற்றவர்கள் அனைவரும் ராயல்டி / சீனியரேஜ் உரிமக் கட்டணத்தில் 30% தொகையை மாவட்ட கனிம அறக்கட்டளையில் செலுத்த வேண்டும். 12.01.2015-ற்கு பின்னர் சுரங்க / குத்தகை உரிமம் பெற்றவர்கள் அனைவரும் ராயல்டி / சீனியரேஜ் உரிமக் கட்டணத்தில் 10% தொகையை மாவட்ட கனிம அறக்கட்டளையில் செலுத்த வேண்டும். அனைத்து குவாரி குத்தகைதாரர்களும் இதன் முறையே மாவட்ட கனிம அறக்கட்டளையில் தங்களது உரிமக்கட்டணத்தில் 10% (or) 30% தொகையை செலுத்தி வருகின்றனர். மேலும், அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்கள் எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையினை நீதிமன்ற ஆணையின்படி மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியில் செலுத்தி வருகின்றனர்.

3). நாமக்கல் மாவட்டத்தில் 76 கிராம ஊராட்சிகள் 3 பேரூராட்சிகள் மற்றும் 1 நகராட்சி ஆகியவைகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

4). நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியாக 31.03.2022 வரை **ரூ.5,52,63,393/-** (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை

வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து 2018-2019-ஆம் நிதியாண்டு முதல் 2020-2021 ஆம் நிதியாண்டு வரை 41 திட்டங்களுக்கு ரூ.2,12,28,400/- மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் 34 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அதற்கு உண்டான தொகை ரூ.1,77,18,280/- விடுவிக்கப்பட்டது. மேலும் நடப்பில் உள்ள 2 திட்டங்களுக்கு உண்டான தொகை ரூ.15,96,400/-ம் சம்மந்தப்பட்ட துறைக்கு வழங்கப்பட்டது. மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து ஒப்புதல் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட 34 திட்டங்களுக்கும் மற்றும் நடப்பில் உள்ள 2 திட்டங்களுக்கும் உண்டான தொகை மொத்தம் ரூ.1,93,14,680/- மட்டும் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பில் உள்ள 2 திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின் அதற்கு உண்டான தொகை ரூ.8,75,000/- சம்மந்தப்பட்ட துறைக்கு விடுவிக்கப்படும். மேலும் ரூ.9,25,000/- மதிப்பில் உள்ள 3 திட்டங்கள் கைவிடப்பட்டது. நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலம் 2021-2022 - ஆம் நிதியாண்டில் எவ்வித திட்டங்களுக்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்படவில்லை.

5). மேலும், மாவட்ட கனிம அறக்கட்டளை பணிகளை மேற்கொள்ள தினக்கூலி அடிப்படையில் (Assistant cum Computer Operator) Outsourcing முறையில் பணியமர்த்தப்பட்ட பணியாளருக்கு அக்டோபர் 2018 முதல் மார்ச் 2022 வரை ரூ.5,95,900/- தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் ஏப்ரல் 2021 முதல் மார்ச்- 2022 வரையிலான பன்னிரண்டு மாத காலங்களுக்கு ரூ. 1,44,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

6). மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை ந.க.எண்.53 / கனிமம் / 2019 நாள்: 26.07.2019-ன் படி சுரங்க / குவாரி குத்தகைதார்களிடம் இருந்து மாதாந்திரம் பெறப்படும் 10% மற்றும் 30% மாவட்ட கனிம அறக்கட்டளை தொகை, அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்கள் கடத்திச் செல்லும் வாகனங்களை கைப்பற்றுகை செய்து விதிக்கப்படும் அபராதத்தொகை மற்றும் சுரங்க / குவாரி குத்தகைதார்களின் நிலுவைத் தொகை போன்றவை மாதாந்திரம் வசூலிக்கப்படும் மொத்த தொகையிலிருந்து 1% மட்டும் அரசாணை G.O.(Ms.)No.112 Industries (MMD.1) Department dated: 30.05.2019-ன் படி

மற்றும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களின் நேர்முகக்கடித எண். 3946 / LC / 2015 நாள்: 18.07.2019-ன்படி மாநில அளவிலான கனிம அறக்கட்டளை நிர்வாக பயனுக்காக 1% தொகை ஜீன் 2019 முதல் செப்டம்பர்-2021 வரை ரூ.2,63,591/- தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதியாண்டில் மட்டும் செப்டம்பர்-2021 முதல் மார்ச்-2022 வரை மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து 1% தொகை ரூ.44,237/- (ரூபாய் நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று முப்பத்து ஏழு மட்டும்) RTGS மூலம் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து மாவட்ட அளவிலான நிர்வாக செலவினங்களுக்காக 5% தொகை ஆனது 01.06.2020 முதல் 31.03.2022 வரை ரூ.9,66,701/- தொகை பாங்க் ஆப் பரோடா வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதியாண்டில் மட்டும் 01.04.2021 முதல் 31.03.2022 வரை ரூ.5,67,035/- தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளை அலுவலக பயன்பாடுகளுக்காக கடந்த 2018ஆம் நிதியாண்டு முதல் தற்போது (2021-2022)-ஆம் நிதியாண்டு வரை ரூ.23,69,856/- ஐ செலவிடப்பட்டுள்ளது.

**Status of the Namakkal DMFT Fund as on 31.03.2022.**

| | | | |
|---|---|---|---|
| 1. | A). The total accrual of DMF as on 31.03.2022.( Receipts received of Sep- 2017 to March-2022) | | **Rs. 5,52,63,393/-** |
| 2. | B). 5% amount for Administrative Expenses incurred for the period (06/2020 to 03/2022) | | **Rs. 9,66,701/-** |
| 3. | C) Remaining available DMF fund (C=A-B) | | Rs. 5,42,96,692/- |
| 4. | Amount sanctioned for 41 projects | | **Rs. 2,12,28,400/-** |
| 5. | (i) | Amount spent for 34 completed and Ongoing projects. | Rs. 1,93,14,680/- |
| | (ii) | 1% Amount Sent to DGM Office. (05/2019 to 09/2021) | Rs. 2,63,591/- |
| | (iii) | District Expenditures. | Rs. 23,69,856/- |
| | | Total | **Rs. 2,19,48,127/-** |

| | | |
|---|---|---|
| | (iv) Amount to be incurred for the sanctioned projects | Rs. 8,75,000/- |
| 6. | E). 3 Scrapped project | Rs. 9,25,000/- |
| 7. | F). Available fund as on 31.03.2022 in Bank Statement | Rs. 3,23,48,565/- |
| 8. | Available fund after Reducing the Ongoing Projects amounts (F-5(iv)) | Rs. 3,14,73,565/- |
| 9. | 30 % amount in Rs. 2,07,35,387/- (as on 31.03.2021). Reserved Fund for Covid-19 | **Rs. 62,20,616/-** |
| 10. | Total Balance Fund for Projects | Rs. 2,52,52,949/- |
| 11. | 60% for High Priority | **Rs. 1,51,51,769/-** |
| 12. | 40% for other Priority | **Rs. 1,01,01,180/-** |

11/7/21

தலைவர்,
நாமக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளை
நாமக்கல்.

RG 05/7/23 5/7/23 10/7/23